00861

# இளநிலை கல்வியியல்

# பருவத்தேர்வு (B.Ed.)

## Term-End Examination

## June, 2017

## BESE-046 : தமிழ் கற்பித்தல்

## (TEACHING OF TAMIL)

*Time : 3 hours* *Maximum Weightage : 70%*

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

(ii) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பீடு சமம்.

**1.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

கற்பித்தல் முறைகளில் செயல் திட்ட முறையின் கூறுபாடுகளையும், சிறப்பம்சங்களையும் விளக்குக.

அல்லது

கற்பித்தலில் துணைக் கருவிகளின் பயனை விளக்கிப், பொதுவாகப் பயன்படுத்தத் தக்க துணைக் கருவிகள் சிலவற்றைப் பாடத்தோடு பொருத்தி விளக்குக.

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

நல்லதொரு பாடநூலின் சிறப்பு அம்சங்களை விவரித்துப் பாடநூலை ஆசிரியர் எங்ஙனம் பயன்படுத்த வேண்டும் என்பதை விவரிக்க.

**அல்லது**

பள்ளிகளில் நூலகங்களின் இன்றியமை யாமையை எடுத்துரைத்து, அவற்றின் பயன்பாட்டில் ஆசிரியர் பங்கினை விவரிக்க.

3. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **4** (நான்கு) வினாக்களுக்கு **150** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(அ) மையப்போக்கு அளவைகள் யாவை ? (Measures of central tendency) அவை ஒவ்வொன்றையும் குறித்துச் சிறு குறிப்பு வரைக.

(ஆ) அடைவுத் தேர்வு ஏன் பயன்படுத்தப் படுகிறது ? அதன் வகைகளை விவரி.

(இ) இலக்கணங் கற்பித்தலின் இருவேறு முறைகளை விவரி.

(ஈ) உரைநடை கற்பிக்குங்கால், அகராதியைப் பயன்படுத்தும் திறன், மாணவர்களது சொற்களஞ்சியப் பெருக்கம், ஆகியவற்றை எங்ஙனம் வளர்ப்பீர் ?

(உ) மாணவர்களின் கட்டுரைப் பயிற்சிகளைத் திருத்துங்கால் ஆசிரியர் கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை ?

(ஊ) ''கற்றலின் கேட்டல் நன்று'' என்பதால் நல்ல கேள்விச் செல்வத்தை மாணவர்கள் பெற ஆசிரியர் மேற்கொள்ளத்தக்க வழிமுறைகள் யாவை ?

(எ) கல்வியியல் மதிப்பீட்டில் பயன்படுத்தப் படும் கருவிகள் யாவை ?

(ஏ) டாக்டர். உ.வே. சாமிநாதையர் அவர்களின் தமிழ்த் தொண்டினை விவரி.

**4.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

மாணவர்களிடையே எழுத்து திறனை வளர்க்கும் வழிமுறைகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.